DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, ATTUR.**

CC. / STC. / MC./ DVC. No : **CC. 257/2020**
Miscellaneous : -

Deposition of **PW – 1 Witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.தனபால்** |
| Father's Name | : | **அருணகிரி** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | **59** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11th day of January 2023. (11.01.2023)**

**சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது. முதல் விசாரணை**
துவக்க நேரம் 02.50

1) நான் ஈரோடு மாவட்டம், பவானியில் உள்ள லஷ்மி நகரில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 06.02.2020 அன்று மாலை சுமார் 5 மணி அளவில் TN 05 BX 4779 என்ற பதிவெண் கொண்ட லாரியை, சென்னை கேளம்பாக்கத்தில் உள்ள செட்டிநாடு கம்பெனியில் இருந்து கல்மாவு பவுடர் ஏற்றிக்கொண்டு கோவை செல்வதற்காக சென்னையிலிருந்து புறப்பட்டு வந்துக்கொண்டிருந்தேன்.

3) நான், சென்னையிலிருந்து சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கீத்தாலயா திருமண மண்டபத்தின் அருகில் சென்றுக்கொண்டிருந்தபொழுது, லாரியின் இடதுபுற பின்பக்க சக்கரத்தில் இருந்து சத்தம் வந்தது. நான், உடனே லாரியை ஓரம் கட்டி மண்தரையில் நிறுத்திவிட்டு, முன்பின் இருந்த சக்கரங்களை சரிபார்த்துவிட்டு, லாரியில் ஏறும்பொழுது, ஸ்ரீராம் டிராவல்ஸ் பஸ் ஒன்று வேகமாக வந்து லாரியின் வலது பக்கத்தில் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

4) நான் இறங்கி வந்து, லாரியின் பின்பக்கம் பார்த்தபொழுது லாரியின் பின்பக்க பம்பர் மற்றும் டோர் சேதமடைந்திருந்தது. ஸ்ரீ ராம் டிராவல்ஸ் பஸ்ஸின் முன்பக்கத்தில் இருந்து படிக்கட்டு வரை சேதமடைந்திருந்தது. பஸ்ஸின் உள்ளே இருந்த 4, 5 நபர்களுக்கு காயம் ஏற்பட்டிருந்தது.

5) ஸ்ரீ ராம் டிராவல்ஸ் பஸ்ஸின் டிரைவருக்கு காயம் ஏற்படவில்லை. அந்த பஸ்ஸின் டிரைவரை பார்த்தேன். மேற்படி அந்த பஸ்ஸின் ஓட்டுனர் ஆஜர் எதிரிதான். அந்த பஸ்ஸின் பதிவு எண் ஞாபகமில்லை. காயமுற்றவர்களை 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம்.

6) மேற்படி விபத்து ஏற்படுத்திய ஓட்டுனரின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி, ஆத்தூர் ஊரக காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். **(புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) விபத்து நடந்ததாக சொல்லும் இடம் ஆத்தூர்-சேலம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். நான் லாரியை நிறுத்தியிருந்த இடத்தில் பார்க்கிங் ஏரியா எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2) ஆத்தூர்-சேலம் தேசிய நெடுஞ்சாலையில் லாரி நின்றிருந்தபொழுது பார்க்கிங் லைட், இன்டிகேட்டர் போடப்பட்டதா என்றால் பின்பக்கம் 4 லைட்டும், சைடு பக்கத்தில் 3 லைட்டும் போட்டு வெள்ளைக்கோட்டை தாண்டி நிறுத்தியிருந்தேன்.

3) சம்பவம் நடந்து, அரை மணிநேரத்தில் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்றவுடன், என்னிடம் போலிசார் கேட்டு எழுதி கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றால் இல்லை, நானே சென்று டைப் செய்து எடுத்துவந்து 1.30-3 மணிக்குள் புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்து 6 மணி நேரம் கழித்து புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம், அந்த நேரத்தில் டைப் அடிக்க முடியாது, பிறகு டைப் அடித்து எடுத்துவந்து கொடுத்தேன்.

4) போலிசார் எப்படி டைப் அடிக்க சொன்னார்களோ, அப்படி டைப் அடித்து எடுத்து வந்து கொடுத்தேன் என்றால் இல்லை, நானேதான் டைப் அடித்து எடுத்துவந்து கொடுத்தேன்.

5) எதிரி சரியாகத்தான் அவரது பாதையில் சென்றுக்கொண்டிருந்தார் என்றாலும், நான் திடீரென்று சாலையின் மையத்தில் நிறுத்தியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல, நான் வண்டியை நிறுத்தி 20 நிமிடம் கழித்துதான் அந்த வண்டி வந்தது.

6) தேசிய நெடுஞ்சாலையில், நினைத்த இடத்தில் வண்டியை நிறுத்தக்கூடாது என்று உத்தரவு உள்ளது என்றால் சரிதான். அப்படி நிறுத்தினால் அபராதம் விதிக்கப்படும் என்றால் சரிதான்.

7) இந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடக்கவில்லை என்றாலும், என்னுடைய கவனக்குறைவால் நான் வாகனத்தை திடீரென்று தேசிய நெடுஞ்சாலையில் நிறுத்தியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

8) விபத்து நடந்த இடத்தில் வேகத்தடை எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்து எதிரியின் கவனக்குறைவால் நடக்கவில்லை என்றாலும், என்னுடைய கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை -** இல்லை
முடிவு நேரம் 03.09

ஒம்/-S.முனுசாமி,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஆத்தூர்.